## இந்திய உயர் ஸ்தானிகராலயம், கொழும்பு
## ஊடக அறிக்கை

### பெருந்தோட்டப் பகுதிகளில் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் முதற்தொகுதி வீடுகளின் கையளிப்பும் மேலதிக 10,000 வீடுகளுக்கான ஒப்பந்தமும்

நுவரெலியா மாவட்டத்தின் பூண்டுலோயாவிலுள்ள டன்சினேன் தோட்டத்தில் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட முதற் தொகுதி வீடுகள் ஆகஸ்ட் 12, 2018 அன்று நடைபெற்ற ஒரு விசேட வைபவத்தில் பயனாளிகளினால் உரித்துக் கொள்ளப்படுவதற்கு கையளிப்புச் செய்யப் பட்டன. இந்தியாவின் கௌரவ பிரதம மந்திரி ஸ்ரீ நரேந்திர மோடி செய்மதியினூடக வீடமைப்புத் திட்டப் பயனாளிகளுக்கு உரையாற்றினார்.

இந்த வைபவத்தில் கலந்து கொண்ட இலங்கைப் பிரதம மந்திரி கௌரவ ரணில் விக்கிரமசிங்க, இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் திரு. தரண்ஜித் சிங் சந்து, மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் கௌரவ. பழனி திகாம்பரம், பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சர் கௌரவ நவீன் திசாநாயக்க மற்றும் காணிகள் மற்றும் பாராளுமன்றச் சீர்திருத்த அமைச்சர் கௌரவ கயந்த கருணாதிலக்க அவர்களினால் 400 இற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு புதிய வீடுகளுடன் கூடியதான நில உரிமைகள் கையளித்து வைக்கப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் பலரும், சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் அதே போன்று பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை நிலையத்திலிருந்தான உத்தியோகத்தர்கள், பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்கள், மற்றும் வீட்டுப் பயனாளிகள் மற்றும் அவர்களது குடும்பங்கள் உட்பட, 1500 ஐ அண்மித்ததாக, டன்சினேன் தோட்டத்திலிருந்து ஒரு பெருந் தொகையான மக்களும் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

வைபவத்தில் செய்மதி மூலமான தனது உரையில் பிரதம மந்திரி மோடி, புதிதாகக் கட்டப்பட்ட தனி வீடுகளின் பெருமை மிக்க உரிமையாளர்களைப் பாராட்டி வாழ்த்தினார். வீடுகளை நிர்மாணிப்பதில் பயனாளிகளும் ஆர்வத்தோடு பங்குபற்றும் இந்திய வீடமைப்புத் திட்டத்தில் வீட்டுரிமையாளர்களும் ஈடுபாட்டுடன் பங்கேற்கும் அணுகுமுறையின் தனித் தன்மைகளைக் குறிப்பிட்டு, இலங்கையில் US$ 350 மில்லியன்களுக்கும் மேற்பட்ட ஒரு நன்கொடையுடனான இந்திய வீடமைப்புத் திட்டம் எந்தவொரு வெளிநாட்டிலும் இந்தியாவினால் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய நன்கொடை உதவித்திட்டமாகும் என்பதை அழுத்தமாகச் சுட்டிக்

காட்டினார். இந்தியாவினால் உறுதியளிக்கப்பட்ட மொத்தம் 60,000 வீடுகளில் ஏறத்தாழ 47,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்பதையும் அவர் நினைவுபடுத்தினார்.

மேலும், கடந்த மாதத்தில் இலங்கை முழுவதுமாக வைத்தியசாலை அனுமதிக்கு முன்னதான அவசரநிலை நோயாளர் காவுவண்டிச் சேவையின் விரிவாக்கம், 2017 ஆகஸ்டில் வாரணாசிக்கு கொழும்பிலிருந்து எயர் இந்திய விமானச் சேவையின் ஆரம்பம் மற்றும் இன்று (ஆகஸ்ட் 12, 2018) பெருந்தோட்டப் பகுதியில் மேலும் 10,000 வீடுகளின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தத்தின் கைச்சாத்திடல் என்பவற்றை நினைவுபடுத்தி, பிரதம மந்திரி மோடி கடந்த வருடத்தில் இலங்கைக்கான அவரது விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டிருப்பது குறித்து தனது திருப்தியையும் வெளிப்படுத்தினார்.

இலங்கை இந்தியாவிற்கு விசேடமானதாக தொடர்ந்துமிருக்கும் என்பதைத் தெரிவித்து, கூடுதலான அமைதி மற்றும் சுபீட்சம் நோக்கிய இலங்கை மக்களின் பயணத்தில் கூடவேயிருப்பதற்கு இந்திய அரசாங்கம் மற்றும் மக்களின் பற்றுறுதியையும் அவர் மீள்வலியுறுத்தினார்.

பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க தனது உரையில் பெருந்தோட்டப்பகுதிகளில் வீடுகளைக் கட்டிக் கொடுத்தல் உட்பட அபிவிருத்தித் திட்டங்களில் இலங்கையின் பங்காளராக செயற்படுதலில் இந்தியாவின் பற்றுறுதிக்கு பாராட்டுதல்களைத் தெரிவித்தார்.

இதே வைபவத்தில், பெருந்தோட்டப் பகுதிகளில் மேலதிகமாக 10,000 வீடுகளின் நிர்மாணித்தலுக்கான பரஸ்பர ஒப்பந்தப் பத்திரம் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் திரு. தரண்ஜித் சிங் சந்து மற்றும் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் கௌரவ. பழனி திகாம்பரம் ஆகியோரினால் கைச்சாத்திடப் பட்டது. 2017 இல் இலங்கைக்கான அவரது விஜயத்தின் போது இந்த மேலதிக வீடுகளைக் கட்டுவதற்கு கௌரவ இந்தியப் பிரதம மந்திரி ஸ்ரீ நரேந்திர மோடியினால் வாக்குறுதியளிக்கப் பட்டமை இங்கு நினைவுகூரப்படலாம். இந்த ஒப்பந்தத்தோடு பெருந்தோட்டப் பகுதிகளில் தோட்டத் தொழிலாளர்களுக்காக வீடுகளைக் கட்டுவதற்கான இந்தியாவின் பற்றுறுதி 14000 ஆக அதிகரித்துள்ளது.

**கொழும்பு**
**ஆகஸ்ட் 12, 2018**